19.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாய நிலங்களில் ரசாயன பூச்சிகொல்லிகளை தவிர்க்கும் புதிய திட்டம்: 150 கிராமங்களில் அமல்



ரசாயன பூச்சிகொல்லிகளைத் தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த "ஒருங்கிணைந்த பூச்சிநோய் மேலாண்மை மாதிரி கிராமத் திட்டம்' என்ற புதிய திட்டம் தமிழகத்தில் 150 கிராமங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வேளாண் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி, சென்னையில் புதன்கிழமை தொடங்கியது. இந்தப் பயிற்சியை வேளாண்மைத் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின் மூலம், குறைந்த செலவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சி, பயிர் நோய் மேலாண்மை முறை விவசாயிகளிடையே பரவலாக்கப்படும். இந்தத் திட்டம் 16 மாவட்டங் களில் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள 56 வட்டாரங்களைச் சேர்ந்த 150 கிராமங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்துக்கான செலவு ரூ.1.65 கோடியாகும். மாநில திட்டக்குழுவின் பங்களிப்பு ரூ.1.5 கோடியாகவும், விவசாயிகளின் பங்களிப்பு ரூ.15 லட்சமாகும். திட்டத்தின் பயன்கள்: இந்தப் புதிய திட்டத்தின் மூலம் ரசாயன பூச்சிகொல்லிகளைத் தவிர்த்து, விவசாயிகளே உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை உற்பத்தி செய்யலாம். சுற்றுச்சூழல் பொறியியல், சுற்றுச்சூழல் அமைப்புப் பகுப்பாய்வு தொழில்நுட்பத்தின் மூலம்

விஷமில்லாத உணவு உற்பத்தி ஊக்குவிக்கப்படும். சூழ்நிலையோடு ஒருங்கிணைந்த வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அளித்து சாகுபடி செலவை குறைப்பது, வேளாண் கழிவுகளை மறுசுழற்சி மூலம் ரசாயன உரமில்லாத உணவு உற்பத்தி செய்வது, விவசாயிகளின் வாழ்வாதாரத்தோடு பூச்சி நோய் மேம்பாட்டுத் திறனிலும் தன்னிறைவு அடையச் செய்வது ஆகியன இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். புதிய திட்டத்துக்கான பயிற்சியில் மாநில திட்டக் குழு துணைத் தலைவர் சாந்தா ஷீலா நாயர், வேளாண்மைத் துறை செயலாளர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர் மு.ராஜேந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். உணவு தானிய சேமிப்புக் கிடங்கு அமைக்க மத்திய மானியத்தை அதிகரிக்க வேண்டும் உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கான மத்திய அரசின் மானியத்தை அதிகரிக்க வேண்டும் என்று மக்களவையில் அதிமுக உறுப்பினர்கள் வலியுறுத்தினர். மக்களவையில் புதன்கிழமை நடைபெற்ற உணவு தானிய சேமிப்புக் கிடங்கு சட்டத் திருத்த மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்று அதிமுக உறுப்பினர்கள்பேசியதாவது:

**கு.பரசுராமன் (தஞ்சாவூர்):** தமிழக அரசு விவசாய விளைபொருள்களுக்கு ஆதரவு விலை கிடைக்கும் வகையில் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்கவும், அதன் மீது தானிய ஈட்டுக் கடன் வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. மொத்தம் 4,11,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3,317 கிடங்குகள் கட்டத் திட்டமிடப்பட்டது. இதுவரை 2,72,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2,251 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதை மேலும் விரிவுபடுத்த மத்திய அரசின் மானியத்தை அதிகரிக்க வேண்டும். தஞ்சாவூரைச் சுற்றியுள்ள 10 மாவட்ட விவசாயிகள் நெல், கரும்பு, வாழை, தென்னை விவசாயத்தை நம்பியுள்ளன. இந்த மாவட்டங்களில் உள்ள அனைத்து ஒன்றியங் களுக்கும் சேமிப்புக் கிடங்கு மற்றும் குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு அமைத்து தர வேண்டும்.

**எஸ்.ஆர். விஜயகுமார் (மத்திய சென்னை):** 1962-ஆம் ஆண்டின் உணவு தானிய கிடங்கு கழக சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ள இச்சட்டத் திருத்த மசோதா மீது சில சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. மத்திய உணவுக் கிடங்கு கழகம் தனது நடவடிக்கைகளால் இந்திய அரசுக்கு 1957-58-ஆம் ஆண்டு முதல் தனது லாபத்தின் ஒரு பங்கை அளித்து வருகிறது. நமது நாட்டின் பொது விநியோகத் துறைக்கு முதுகெலும்பாகத் திகழும் மத்திய உணவு கிடங்கு கழகத்தின் நடவடிக்கைகள் சிறப்பாக உள்ளன. இது லாபம் பெறும் நிறுவனமாக இருந்தாலும், இது அரசின் நிதி ஆதரவைப் பெறாமல் இயங்குகிறது. 2003-ஆம் ஆண்டு முதல் இக்கழகம் தொடர்ந்து லாபத்தில் இயங்கி வருகிறது. இதுவரை எந்த ஒரு நிதி உதவியையும் இந்த நிறுவனம் அரசிடம் கோரவில்லை. ஆனால், இந்த நிறுவனத்தின் பங்குகளுக்கு அரசு கொடுத்து வந்த உத்தரவாதத்தில் இருந்து விலகும் முடிவு ஆச்சரியமளிக்கிறது.

## வேளாண் தொழில் வளர்ச்சிக்காக புதிய திட்டம் தொடக்கம்

வேளாண் சார்ந்த தொழில் துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு தொழில்நுட்ப, செயற்கை பயிர் வளர்ப்பு மையங்களை அமைக்கும் ரூ. 200 கோடி மதிப்பிலான புதிய திட்டத்தை, மத்திய அரசு புதன்கிழமை தொடங்கியது. புது தில்லியில் இத்திட்டத்தை தொடங்கி வைத்து சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா பேசியதாவது: இந்தப் புதிய திட்டத்தின் மூலமாக வேளாண் சார்ந்த தொழில் துறையில், புதுமையான கண்டுபிடிப்புகள் அதிகரிக்கும். ஊரகப் பகுதிகளில் அதிக அளவிலான தொழில் முனைவோர்கள் உருவாகக் கூடும். இத்திட்டத்தின் மூலம் தொழில் நிறுவனங்களை அமைப்பதற்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று கல்ராஜ் மிஸ்ரா கூறினார்.

## கோடை எள் சாகுபடி தொழில்நுட்பங்கள்



கோடையில் எள் சாகுபடி செய்வதற்கு மார்ச் மாதம் ஏற்ற பருவமாகும். ஒரு ஹெக்டேரில் விதைக்க 5 கிலோ எள் விதைகள் தேவைப்படும். ஒரு கிலோ விதைக்கு திரம் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் அளவில் கலந்து விதை நேர்த்தி செய்வதால் பயிரில் பூஞ்சாள நோய் தாக்குதலைத் தடுக்கலாம். விதைக்கப்பட உள்ள விதையுடன் நான்கு பங்கு மணலைக் கலந்து சீராக விதைக்க வேண்டும். 30 செமீ-க்கு 30 செமீ இடைவெளிவிட்டு சதுரமீட்டருக்கு 11 செடிகள் என்ற அளவில் பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும். இத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதால் எள் சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம்.

## உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் தடுப்பு முறை



உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய்க்கு தடுப்பு முறையைக் கடைப்பிடிக்காவிட்டால், மிக விரைவாக அனைத்துச் செடிகளிலும் பரவி மகசூல் பாதிப்பை ஏற்படுத்திவிடும். மஞ்சள் தேமல் நோய்க்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து மதுரை விநாயகபுரம் நீர்மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் பே.இந்திராகாந்தி தெரிவிக்கும் ஆலோசனை: உளுந்து பயிரிடும் விவசாயிகள் நோய் எதிர்ப்பு சக்தி அல்லது நோய் தாங்கக் கூடிய ரகங்களான வம்பன் - 4, வம்பன்-5, வம்பன்-6 ஆகிய ரகங்களைத் தேர்வு

செய்யலாம். மஞ்சள் தேமல் நச்சுயிரி தாக்கப்பட்ட பயிர்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து பிடுங்கிளடுக்க வேண்டும். வரப்பு ஓர பயிர்களாக ஏழு வரிசையில் சோளத்தைப் பயிரிடலாம். இமிடா குளோர்பிரிட் 70 டபுள்யூஎஸ் என்ற மருந்தை கிலோவுக்கு 5 மிலி என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். டைமெத்தோயேட் மருந்தை ஹெக்டேருக்கு 750 மிலி என்ற அளவில் விதைத்த 30 நாள் கழித்து இலைவழித் தெளிப்பு செய்ய வேண்டும். இத்தகைய தடுப்பு முறைகளைக் கடைப்பிடித்தால் மஞ்சள் தேமல் நோயிலிருந்து உளுந்து பயிரைப் பாதுகாக்கலாம் என்றார்.

**<u>விளைச்சலை அதிகரிக்க பயிர் பாதுகாப்பு முறை</u>**



தற்போது மாமரங்களில் பூப்பிடிக்கும் பருவம் என்பதால் பூங்கொத்து புழுக்கள் உள்ளிட்டவைகளை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையை பின்பற்ற வேண்டும் என தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக விவசாயிகளுக்கு அவர் வழங்கிய ஆலோசனை விவரங்கள் வருமாறு: விருதுநகர் மாவட்டப் பகுதிகளில் ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, ராஜபாளையம், சேத்தூர், தேவதானம் உள்ளிட்ட பகுதிகளில் 5 ஆயிரம் ஹேக்டேரில் பங்கனப்பள்ளி, கல்லாமை, நீலம், காசாலட்டு மற்றும் ஏற்றுமதி ரகங்களான ஹிமாயுன், அல்போன்சா மாம்பழ வகைகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். தற்போது, மாமரங்கள் பூ பிடிக்கும் பருவம் என்பதால் தத்துப்பூச்சி, பூங்கொத்து புழு, இலைச்சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான், இலைப்புள்ளி போன்ற பல்வேறு நோய்கள் மற்றும் பூச்சிகள் தாக்குதல் அதிகம் இருக்கும். இந்நோய் தாக்கினால் மாம்பழ மகசூல் குறையும். அதனால், விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர்

பாதுகாப்பு முறையை பின்பற்ற வேண்டும். பயிர் பாதுகாப்பு முறை: தத்துப்பூச்சியை கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு பாசலோன் 35 இசி 1.5 மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து கிளைகள், தண்டுகள், மரத்தின் இலைகள், ஆகியவைகளில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும். அதேபோல், கார்பரில் 50 சதவீதம் நனையும் கந்தகம் ஆகியவற்றை ஒரு லிட்டர் நீரில் கலந்து பூப்பிடிக்கும் காலத்தில் தெளிக்க வேண்டும். பூப்பிடிக்கும் பருவம் என்பதால் பூங்கொத்து புழு அதிகம் தாக்கும். இதை கட்டுப்படுத்த பாசலோன் 2 மில்லி மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

நோய்த் தாக்குதல்: தண்டு துளைப்பான் நோய் தாக்குதல் இருந்தால் தரை மட்டத்திலிருந்து சுமார் 1 மீட்டர் உயரத்தில் மரத்தின் பட்டையை ப வடிவில் செதுக்கி இடையில் நனையும் பஞ்சை வைத்து மானோ குரோட்டாபாஸ் 10 மில்லி மருந்தை பஞ்சு நனையும் வரையில் வைத்து பின்பு பட்டையை மரத்தோடு பொறுத்தி களிமண் பசையினால் மூட வேண்டும். இலைப்புள்ளி தாக்குதல் இருந்தால் மாங்கோசெப் 2 கிராம் மருந்து ஒரு லிட்டர் தண்ணீர் அல்லது கார்பென்டாசிம் 1 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரிலும் அல்லது க்ளோராதலேனில் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து பிஞ்சுப் பருவத்திலிருந்து அறுவடை செய்வதற்கு முன்பு வரையில் 15 நாள்களுக்கு ஒரு முறை தெளித்து வர வேண்டும். இதுபோன்ற ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை பின்பற்றி மாம்பழ மகசூலை அதிகரிக்க செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## மரங்களை தாக்கும் நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்



தமிழகத்தில் தற்போது மரம் வளர்ப்பில் அரசு தீவிரம் காட்டி வருகிறது. இவ்வாறு வளர்க்கப்படும் மரங்களில் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகளை பின்பற்றினால் அதிக இலாபம் பெறலாம். இதுகுறித்து வைகை அணை வனவிரிவாக்க அலுவலர் இ.ராமகிருஷ்ணன்தெரிவிக்கும்ஆலோசனைகள்:

**வாடல் நோய்**: இலைகளில் இலை நரம்புகளுக்கிடையே பகுதி பகுதியாக பழுப்பு நிறம் காணப்படும். செடிகள் கருகி வாடிவிடும். நீர் தேங்கி நிற்பதால் வேர்களில் காயங்கள் ஏற்பட்டாலும், பாக்டீரியா மூலம் நோய் உண்டாகிறது. இதனை கட்டுப்படுத்த மரங்களின் அடிப்பாகத்தில் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். பிளேண்டோமைசின் 0.1 சதவீதம் மருந்தை வேர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். **அழுகல் நோய்:** கழுத்து பகுதி சுருங்கியும் இலைகள் கருகியும் வாடியும் காணப்படும். இதனை கட்டுப்படுத்த பிளாண்டோமைசின் 0.1 சதவீதம் மருந்தை வேர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும்.

**இலை அழிவு நோய்:** இலைகள் வறண்டு உதிர்ந்து விடும். நாற்றங்காலில் நெருக்கமாக வைப்பதால் ஏற்படுகிறது. நோய் தாக்கிய செடிகளை நீக்கி விடவேண்டும். பின்னர் டைத்தேன் எம் 45 பூஞ்சாளக் கொல்லியை 0.1 சதவீதம் தெளிக்கவேண்டும்.

**வெண்படல பரவு நோய்:** இலை முழுவதும் பவுடர் பூசியது போல் வெண்ணிறப்படலம் காணப்படும். இதனால் இலைகள் ஒளிச்சேர்க்கை

செய்யமுடியாமல் இறக்க நேரிடும். கந்தகத்தூளை இலைகளில் தூவுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

**இளை துரு நோய்:** இலைகளின் மேல்பரப்பில் ஆரஞ்சு நிறப்புள்ளிகள் தோன்றி இலைகள் துருப்பிடித்தது போல் காணப்படும். மேலே குறிப்பிட்டது போல் கந்தக தூளை தூவுவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

**வேர் அழுகல் நோய்:** ஆரம்பத்தில் இலைகள் மஞ்சளாக மாறி கருகிய தோற்றத்தை அடையும், மேற்புற இலைகள் செடி உச்சியில் உள்ள இலைகள் தளர்ந்து துவண்டு கீழ்நோக்கி தொங்கும். பின்னர் இலைகள் வாடி இறந்து விடும். வேர்ப்பகுதி நிறம் மாறி அழுகி இருக்கும். இந்நோய் நீர் தேங்குவதாலும், வேரில் காயம் ஏற்படுவதாலும் ஏற்படுகிறது. இதனை கட்டுப்படுத்த நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நோய் தாக்கிய செடிகளை உடனே களைந்து விடுவதன் மூலம், பிளான்டோமைசின் 0.1 சதவீதம் மருந்தை மண்ணின் வேர்பகுதியில் ஊற்றுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

**இலை வறட்சி நோய்**: இலைகளின் அடர் பழுப்பு முதல் வெளிர் பழுப்பு வரை புள்ளிகள் காணப்படும். ஒன்றோடொன்று ஒட்டி தளிர் வராமல் இருக்கும். ஒளிச்சேர்க்கையை குறைத்து வளர்ச்சியை பாதிக்கும். இதனை கட்டுப்படுத்த டைத்தேன் எம் 45 மருந்தை 0.1 சதவீதம் இலைகள் மேல் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**தண்டு மற்றும் வேர்பாதிப்பு நோய்:** நாற்றுகளின் இலைகள் மஞ்சளாகவும் வேர்கள் அழுகியும் காணப்படும். இது அதிக நீர் தேங்குவதால் ஏற்படுகிறது. இதனை கட்டுப்படுத்த எமிசான் 6 என்ற

மருந்தை 0.01 சதவீத கரைசலை இலைகளில் தெளித்தும், வேர் அருகில் மண்ணிலும் ஊற்ற வேண்டும்.

**நாற்று இறப்பு நோய்:** மண்ணுக்கு அருகில் உள்ள தண்டுப்பகுதி முதலில் தாக்கப்பட்ட பின் செடிகள் சுருங்கி, மெலிந்து பழுப்பு நிறமாக மாறி இறந்து விடும். இதனை கட்டுப்படுத்த 0.1 சதவீத கரைசலை மண்ணில் ஊற்றி மண்ணை நனைப்பதால் இந்நோயை கட்டுப்படுத்தலாம்.

**இலைப்புள்ளிநோய்**: ஆரம்ப நிலையில் இலைகளில் ஊதாவிலிருந்து பழுப்பு நிறம் வரை புள்ளிகள் காணப்படும். படிப்படியாக தீவிரமடையும் இலைகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கும். இதனை கட்டுப்படுத்த பெவிஸ்ட்டின் மருந்தினை 0.01 சதவீதம் தெளிக்கவேண்டும். மேலும் நோய் எதிர்ப்புசக்தி மிக்க, வீரியம்மிகுந்த தரச்சான்று பெற்ற விதைகளை தேர்ந்தெடுத்து பயிர்செய்யவேண்டும்.

## காரமடையில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

கால்நடைகளுக்கான கோமாரி தடுப்பூசி முகாம் காரமடையில் புதன்கிழமை தொடங்கியது. இதுகுறித்து காரமடை கால்நடை மருத்துவர் சுலோச்சனா தெரிவித்ததாவது: காரமடை, சுற்றுவட்டார பகுதிகளில் மார்ச் 18 முதல் 21-ஆம் தேதி வரை கால் நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.18-ஆம் தேதி சத்யா நகர், குந்தா காலனி பகுதிகளிலும், 19-ஆம் தேதி, ஆர்.வி. நகர், அண்ணா நகர் பகுதிகளிலும், 20-ஆம் தேதி பட்டிகாரம்பாளையம், கே.ஆர். நகர் பகுதிகளிலும், 21-ஆம் தேதி பெள்ளாதி சாலை மற்றும் காரமடை நகரப் பகுதிகளிலும் இந்த முகாம் நடைபெறுகிறது. தினமும் காலை 6 மணி முதல் 10 மணி வரை இம்முகாம் நடைபெறும். எனவே, பொதுமக்கள் தங்களது கால்நடைகளை அந்தந்தப் பகுதிகளில் நடைபெறும் முகாமுக்கு கொண்டு சென்று கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக் கொள்ளவேண்டும் என்றார்.

## இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும்

பேரிடர்களைத் தடுக்க இயற்கை வளங்களை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும் என கூடுதல் தலைமைச் செயலர் (வருவாய் நிர்வாகம் மற்றும் மாநில நிவாரண ஆணையர்) டி.எஸ்.ஸ்ரீதர் வலியுறுத்தினார். தருமபுரி மாவட்டத்தில் அரசுத்துறை அதிகாரிகளுக்கு இயற்கை இடர்பாடுகள் மேலாண்மை மற்றும் பேரிடர் தடுப்புத் திறன் வளர்ப்பு இரண்டு நாள் பயிற்சி முகாம் புதன்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது. இம்முகாமை தொடக்கி வைத்து கூடுதல் தலைமைச் செயலர் டி.எஸ்.ஸ்ரீதர் பேசியது: இயற்கை இடர்பாடுகள் நிகழும் போது வளர்ச்சி பெரிய அளவில் பாதிக்கப்படுகிறது. ஏனெனில் அந்த பாதிப்பை போக்கி மீண்டும் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு தனது முழுக்கவனத்தைச் செலுத்த நேரிடுகிறது. இடர்பாடுகளினால் ஏற்படும்போது மீட்பு நடவடிக்கை மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கு தற்போது மத்திய, மாநில அரசுகள் தனிச் சட்டம் கொண்டு வந்து அதற்கு நிதியையும் ஒதுக்கீடு செய்துள்ளன. பாதிப்புகள் என்பது புயல், வெள்ளம், வறட்சி, விபத்துக்கள் என பல்வேறு வகையில் நிகழ்கின்றது. இது குறித்து, முன் கூட்டியே அறிவிக்க தற்போது தொழில் நுட்ப சாதனங்கள் பெரிதும் பயன்படுகின்றன. காவல்துறை, தீயணைப்பு, மீட்புப் பணிகள் துறை, வருவாய்த் துறை, மருத்துவம் உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கு பேரிடர் நிகழும் போது எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், முதலுதவி அளிப்பது ஆகிய பயிற்சிகள் முறையாகப் பெற்று, கடலோரப் பகுதிகள் மற்றும் அனைத்து கிராம மக்கள், பள்ளி மாணவர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். ஆறு, வனம் உள்ளிட்ட இயற்கை வளங்களை அழிக்காமல் நாம் பாதுகாப்பதன் மூலம் பேரிடரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். அதேபோல இயற்கை இடர்பாடுகள் குறித்த விழிப்புணர்வை பள்ளி மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும் என்றார். வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அருகே உள்ள மைதானத்தில் இடர்பாடுகள் நிகழும் போது கண்காணிப்பு கேமரா

பொருத்திய குட்டி விமானத்தைப் பயன்படுத்துவது குறித்து ஒத்திகை செய்து காண்பிக்கப்பட்டது. ஆட்சியர் கே.விவேகானந்தன் முன்னிலையில் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெ.லோகநாதன், அண்ணா பல்கலைக்கழக பேராசியர்கள் திருமலைவாசன், முத்துக்குமார், சீனிவாசராஜு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீதர், உதவி காவல் கண்காணிப்பாளர் கல்யாண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு :

உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பதிவுப் பெற்ற உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம், விபத்து மரணம் மற்றும் இயற்கை மரண இழப்பீடு, தீவிர நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் உள்ளிட்டவைகளும், உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்குக் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, ஈமச்சடங்கு செலவுத் தொகை உள்பட பல்வேறு உதவித் தொகைகளும் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகைகளைப் பெறத் தகுதியான உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர்கள், தொடர்புடைய கிராம நிர்வாக அலுவலர் அல்லது சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர்களிடம் விண்ணப்ப மனுக்களை அளிக்கலாம் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்ணை மகளிர் குழுவுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

அரியலூர் அருகே உள்ள தேளூரில் அம்மா பண்ணை மகளிர் குழுவினருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது. அரியலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் மோகன் தலைமையில்

நடைபெற்ற இப்பயிற்சியில், திட்ட ஆவணங்களை பயன்படுத்துவது, வங்கிகளை அணுகி நிதி பெறுவது, சுழல் நிதிமுறை ஆகிய கருத்துகளை வேளாண் அலுவலர் சாந்தி விளக்கினார். காய்கறி பயிரிடுவது குறித்து தோட்டக்கலை அலுவலர் சரண்யா செயல்முறை விளக்கம் அளித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பழனிச்சாமி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சுந்தரமூர்த்தி, வாசுகி ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>சிறுதானிய உணவு தயாரித்தல் பயிற்சி நிறைவு</u>

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சிறுதானிய உணவு தயாரித்தலுக்கான தொழில்முனைவோர் பயிற்சி கடந்த 9-ம் தேதி முதல் 17-ம் தேதி வரை நடைபெற்றது. பயிற்சி முகாமை, பெரம்பலூர் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் கோ. மலர்விழி, உதவித் திட்ட அலுவலர் முரளி ஆகியோர் தொடக்கி வைத்தனர். பயிற்சியில், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி தொழில்முனைவோருக்கான பயிற்சியும், வரகு, கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகியவற்றில் பிஸ்கட் தயாரிப்பது, தினை, கேழ்வரகு ஆகியவற்றில் லட்டு தயாரிப்பது, வரகு, சாமை, கேழ்வரகு ஆகியவற்றில் முறுக்கு வகைகள் செய்வது குறித்து செய்முறை பயிற்சி அளித்தார். மேலும், பொருள்களை சந்தைப்படுத்துதல் குறித்த விரிவான விளக்கமும், உரிமம் பெறுவதற்கான வழிமுறைகளும், வங்கிக் கடனுதவி பெற வழிமுறைகள், திட்ட அறிக்கை தயாரித்தல் போன்றவற்றில் விரிவான விளக்கமும் அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியில், சிறுவாச்சூர், சத்திரமனை மற்றும் நொச்சியம் ஆகிய கிராமங்களிலிருந்து மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 20 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்

நன்னிலம் அருகே தட்டாத்திமூலை கிராமத்தில் புதன்கிழமை கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாமை மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தொடங்கிவைத்தார். மாவட்டத்தில் 8-வது சுற்றாக கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது. கிராமம்தோறும் காலை 6 முதல் 9 மணி, மாலை 3 முதல் 5 மணி வரை முகாம் நடைபெறும். எனவே கால்நடை வளாö்ப்பவர்கள் தங்களிடமுள்ள 4 மாதத்துக்கு மேல் வயதுள்ள கன்றுகளுக்கும், சினைப் பசுக்கள், கறவைப் பசுக்கள், எருமைகள் மற்றும் எருதுகளுக் கும் தடுப்பூசி போட்டுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது என்றார் ஆட்சியர் மதிவாணன். முகாமில் கோட்டாச்சியாö முத்துமீனாட்சி, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநாö டேவிட், உதவி இயக்குநர் தனபாலன், நோய் புலனாய்வுத் துறை உதவி இயக்குநாö சுப்பையன் (நாகப்பட்டினம்) வட்டாட்சியாö அம்பிகாபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மீன்வளர்ப்பு மேலாண்மை பயிற்சி முகாம்

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தேசிய மீன்வள அபிவிருத்தி ஆணையத்தின் நிதியுதவியுடன் மீன்வளர்ப்பில் நீர்த்தரப் பண்புகள் மற்றும் அதன் மேலாண்மை என்ற மூன்று நாள் பயிற்சி முகாம் புதன்கிழமை தொடங்கியது. தொடக்க விழா நிகழ்ச்சிக்கு, கல்லூரி பொறுப்பு முதல்வரும், மீன்வளச் சூழலியல் துறைத் தலைவருமான சீனிவாசன் தலைமை வகித்தார். மீன்வளர்ப்புத் துறை தலைவர் ராஜகோபாலசாமி, பயிற்சியின் பயன்கள் குறித்து பேசினார். முகாமில், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மீன்வளர்ப்போர், மீன் பண்ணையில் வேலை செய்பவர்கள் மற்றும் மீன் பண்ணை தொடங்க விரும்புவோர் கலந்துகொண்டனர். தொடக்க விழா

நிகழ்ச்சியில், இணைப் பேராசிரியர் பத்மாவதி, உதவிப் பேராசிரியர்கள் சா. ஆனந்த், மணிமேகலை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை விவசாயிகள் பயன்படுத்த அழைப்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போது செயல்பட்டு வரும் 7 அரசு நேரடி கொள்முதல் நிலையங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர் ம. ரவிகுமார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகம் மூலம், தூத்துக்குடி மாவட்டத்தில் 20 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது தாமிரவருணி ஆற்று பாசனத்துக்குள்பட்ட பகுதிகளில் குரும்பூர், இருவப்பபுரம், ஸ்ரீவைகுண்டம், வசவப்பபுரம், குலையன்கரிசல், ஆழ்வார்திருநகரி, நாசரேத் ஆகிய 7 இடங்களில் மையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக இதுவரை 9,464 குவிண்டால் நெல் ரூ. 1.34 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. சன்னரக நெல் ரகத்துக்கு ஆதாரவிலை ரூ.1400-ம், ஊக்கத் தொகை ரூ.70-ம் என மொத்தம் ரூ. 1470 வழங்கப்படுகிறது. பொது ரக நெல்லுக்கு ஆதாரவிலை ரூ.1360-ம், ஊக்கத் தொகை ரூ.50-ம் என மொத்தம் ரூ.1410 என்ற அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வணிபக் கழகத்தில் நெல் கொளமுதல் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் கொண்டு வரும் நெல்லுக்கு சரியான விலையில் சரியான எடையில் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு உடனடியாக தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

**விவசாயிகளுக்கானஆலோசனை கூட்டம்**

தஞ்சாவூர்,:தஞ்சாவூரில் விவசாயிகளை உள்ளடக்கிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் செயல்பாடு குறித்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது.வேளாண் துணை இயக்குனர் கலியராஜ் தலைமை வகித்தார். அக்ரோ உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயலாளர் முத்துகுமரன், நிர்வாகக்குழு உறுப்பினர் அமிர்தா, ராஜராஜன் உழவர் உற்பத்தியாளர் நிறுவன செயலாளர் மணிமொழியன், வேளாண் அலுவலர் சாருமதி உட்பட வேளாண்மைத்துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**பட்டு நூற்பு மையம் துவங்க நடவடிக்கைபட்டு வளர்ச்சி துறை அதிகாரி உறுதி**

ஈரோடு:உடுமலை பகுதியில், தனியார் பட்டு நூற்பு மையங்கள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, பட்டு வளர்ச்சி துறை நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தாராபுரம், குளத்துப்பாளையம் அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்க தலைவர் லிங்கம் சின்னசாமி, தாராபுரம் - உடுமலையில், பட்டு கூடுகள் உற்பத்தி செய்வதற்கு, கொள்முதல் நிலையம் உடனடியாக அமைக்க வேண்டும் என்று, பட்டு வளர்ச்சி துறையில் கோரிக்கை விடுத்து இருந்தார்.இதுகுறித்து, உடுமலைபேட்டையை சேர்ந்த பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் நாகராஜன் கூறியதாவது:உடுமலை தாலுகாவில், 2015 ஜனவரி வரை 3,000 ஏக்கரில், 1,600 விவசாயிகள் பட்டு தொழில் செய்து வருகின்றனர். நடமாடும் பட்டுக்கூடு அங்காடி மூலமும், கோவை மற்றும் தர்மபுரி, சேலம், பாலக்கோடு அரசு பட்டுக்கூடு அங்காடிகளிலும் கொள்முதல் செய்யப்படுகிறது. அதிகமாக

பட்டு நூற்பு தொழில் நடக்கும் கர்நாடகா மாநிலம் ராம்நகரில் உள்ள, அரசு பட்டுகூடு அங்காடியிலும் விற்பனை செய்து வருகின்றனர். அவிநாசி அருகேயுள்ள வஞ்சிபாளையத்தில் துவங்கியுள்ள தானியங்கி பட்டு நூற்பாலை, தற்போது செயல்பட துவங்கியுள்ளது. முழுமையாக இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முழுமையாக இயங்கும் பட்சத்தில், தினமும், 2,800 கிலோ வரை கொள்முதல் செய்யப்படும். உடுமலை பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பட்டுகூடுகளை, கோவை அரசு பட்டுக்கூடு அங்காடி மூலம், வஞ்சிபாளையம் தானியங்கி பட்டு நூற்பாலை, கேத்தனூர் சர்வோதயா சங்கம், வடவள்ளி சர்வோதயா சங்கம், மூலனூர் சர்வோதயா சங்கம், பொங்கலூர் சர்வோதயா சங்கம், பிற தனியார் பட்டு நூற்பாலைகள் போன்றவை கொள்முதல் செய்து வருகிறது. அதிகளவில் இப்பகுதியில், தனியார் பட்டு நூற்பு மையங்கள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, என்றார்.

## மழை வந்ததால் பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பு

மஞ்சூர் : பனிபொழிவின் தாக்கம் குறைந்ததை அடுத்து, பரவலாக பெய்த மழையால், பசுந்தேயிலை வரத்து படிப்படியாக அதிகரிக்க துவங்கி யுள்ளது. மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்தாண்டு நவம்பர் மாதம் துவங்கிய பனிபொழிவால் பல ஏக்கரில் தேயிலை செடிகள் கருகின. இதனால், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு அதிகபட்சம், 5000 கிலோ வரைக்கு பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டது. வரத்து குறைந்ததால் தேயிலை துாள் உற்பத்தியும் குறைய துவங்கியதால், பெரும்பாலான தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டது. இந்நிலையில், மார்ச் மாதம் துவக்கத்திலிருந்து அவ்வப்போது இடியுடன் கன மழை பெய்தது. மழையால் தேயிலை தோட்டங்களுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை ஏற்பட்டது. இதையடுத்து தற்போது நாளொன்றுக்கு கூட்டுறவு தேயிலை

தொழிற்சாலைகளில்,15 ஆயிரம் கிலோ வரைக்கு பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டது.

**இயற்கை வேளாண்மை தொழில் நுட்ப பயிற்சி**

ஊட்டி : நீலகிரியில், விவசாய நிலங்களில், இயற்கை வேளாண்மை குறித்த தொழில் நுட்ப பயிற்சி வழங்கும் முகாம் துவங்கியது. நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இயற்கை வேளாண்மை, மண் மாதிரிகள் எடுத்தல், நவீன தொழில்நுட்பத்துடன் காய்கறி சாகுபடி செய்தல், தேயிலையின் தரமான பசுந்தேயிலை எடுத்தல், உரமிடுதல் மற்றும் பூச்சி நோய் கட்டுப்பாடு, இயற்கை வேளாண்மை குறித்த தொழில் நுட்பங்கள் ஆகிய செய்முறை பயிற்சி வழங்கப்படுகிறது. அதன்படி, நேற்று, குன்னூர் உல்லாடாவில் பயிற்சி வழங்கப்பட்டது. 19ம் தேதி (இன்று), ஊர் மேல் தொரையட்டி, 24, 25ம் தேதி, ஊட்டி மேல் தொரையட்டி, வரும், 26, 27 தேதிகளில், கூடலூர் புத்துார் வயல் ஆகிய இடங்களில் நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சி முகாமில், விவசாயிகள் பங்கேற்று பயன்பெற வேண்டும்.

**வட்டார விவசாயிகள்ஆலோசனை கூட்டம்**

வேதாரண்யம்,:வேதாரண்யம் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்டம், விவசாயத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில், உதவி இயக்குனர் தாமோதரக்கண்ணன் தலைமையில் நடந்தது.விவசாய விரிவாக்க சீரமைப்புத் திட்டம், 2014-15ன் கீழ் நடந்த கூட்டத்தில் செயல்விளக்கம் அமைத்தல் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சிகள், பண்ணை பள்ளி, அலுவலக நடைமுறை செலவினம், கண்டுனர் சுற்றுலா மற்றும் விவசாயிகள் ஆலோசனைக் குழுவிற்கான ஊக்கத் தொகை ஆகியன குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.கூட்டத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு தலைவர் ரெத்தினம், உறுப்பினர்கள் கண்ணன், வெங்கடாசலம், வைரக்கண்ணு,

வட்டார தொழில் நுட்ப மேலாளர் அருள்பிரகாசம், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் வினோதினி, மோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள்பெயர் பதிவுக்கு விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

திருச்சி,:திருச்சி மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது.கலெக்டர் பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: திருச்சி மாவட்டத்தில், வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கம் திட்டத்தில், விவசாயிகளுக்கு, 20 முதல், 70 குதிரை திறன் வரை உள்ள டிராக்டர்கள், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், பயிர் கதிரடிக்கும் இயந்திரம், களை எடுக்கும் கருவி, விசை தெளிப்பான், நெல்நடவு இயந்திரம், பவர்டிரில்லர், ரோட்ட வேட்டர், நேரடி விதை விதைக்கும் கருவி, லேசர் மூலம் நிலம் சமன்படுத்தும் கருவி, கரும்பு கரணை வெட்டி பதியும் கருவி, டிராக்டர் மூலம் இயக்கும் இலை தூளாக்கும் கருவி, கரும்பு தோகை தூளாக்கும் கருவி, கரும்பில் கட்டை சீவும் கருவி, வைக்கோல் கட்டும் கருவி, நெற்கதிர் அறுக்கும் கருவி, மண் கரை அமைக்கும் இயந்திரம் ஆகிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் மகளிர் விவசாயி களுக்கு, 50 சதவீதம் வரையும், இதர பிரிவு விவசாயிகளுக்கு, 40 சதவீதம் வரை அல்லது அரசு நிர்ணயித்துள்ள தொகை இவற்றில், எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், மணப்பாறை, வையம்பட்டி மற்றும் மருங்காபுரி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், திருச்சி ஜெயில் கார்னரில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும், முசிறி, தொட்டியம், தாத்தையங்கார்பேட்டை, துறையூர் மற்றும் உப்பிலியபுரம் பகுதிகளைச்

சேர்ந்த விவசாயிகள், முசிறி வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாகளர் அலுவலகத்திலும், லால்குடி, புள்ளம்பாடி மற்றும் மண்ணச்சநல்லூர் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், லால்குடி வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும், பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.மேலும், தொழில் முனைவர் மூலம் கரும்பு சாகுபடியில் இயந்திரமயமாக்குதல் திட்டத்தில், டிராக்டர், டிராக்டர் மூலம் இயங்கும் கருவிகள், விதைக் கரும்பில் பரு வெட்டும் கருவி, மினி டிராக்டர், களை எடுக்கும் கருவி, கரும்பு அறுவடை இயந்திரம்,, கரும்பு தோகை கட்டும் கருவி, கரும்பு கட்டை சீவும் கருவி போன்றவை, 40 சதவீதம் அல்லது அரசு நிர்ணயித்துள்ள தொகை இவற்றில் எது குறைவோ, அந்த தொகை வழங்கப்படுகிறது.விரும்பம் உள்ளவர்கள், மாவட்டத்தில் உள்ள சர்க்கரை ஆலை மேலாளர் அல்லது வேளாண் இணை இயக்குனர் அல்லது வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆகியோரிடம் நேரில் விண்ணப்பிக்கலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>மேகமலை வனப்பகுதியில் அபூர்வ சாம்பல்நிற அணில்</u>

தேனி : தேனி மாவட்டம் மேகமலை வனப்பகுதியில் அபூர்வ வகை சாம்பல் நிற அணில்கள் காணப்படுகின்றன. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கர்நாடக மாநிலம் காவிரி வனஉயிரின சரணாலயத் திலும், ஸ்ரீவில்லிபுத்தூர் வன உயிரின சரணாலயத்திலும் மட்டும் அபூர்வ வகை சாம்பல் நிற அணிகள் உள்ளன என கருதப்பட்டது. அதன் பின் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், பழனி மலைபகுதி யிலும், ஆனைமலை, சின்னாறு, அமராவதி மலைப்பகுதி யிலும் இந்த வகை அணில்கள் இருப்பது கண்டறிப்பட்டது.தற்போது தேனி மாவட்டம் மேகமலை வனப்பகுதியில் சாம்பல் நிற அணில்கள் கண்டறியப் பட்டுள்ளன. வனக்குழுவினர் இந்த பகுதியை ஆய்வு செய்து அணில்கள் உள்ளதை உறுதி செய்துள்ளனர். வனக்குழுவினர் கூறியதாவது:

மேகமலை வனப்பகுதியில் மஞ்சனூத்து சோதனை சாவடியை கடந்து இந்திராநகரில் இருந்து வெள்ளிமலை செல்லும் வழியில் உடங்கலாறு என்ற இடத்தில் சாம்பல் நிற அணில்கள் உள்ளன. இதேபோல் பழுப்பு நிற அணில்கள், மலபார் அணில்களும் அதிகம் காணப்படுகின்றன. இந்த அணில்கள் வன உயிரின சட்டம் பகுதி 1 ல் புலிகளுக்கு இணையாக பாதுகாக்கப்பட வேண்டியவை. இவற்றை வேட்டையாடினால் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனை கிடைக்கும். எனவே இந்த அணில்களை பாதுகாப்பது குறித்து சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம், என்றனர்.

## "நானா சாகிப் பர்ப்பிள்' புதிய ரக திராட்சை சாகுபடி செய்ய முடிவு

கம்பம் : "நானா சாகிப் பர்ப்பிள்' என்ற புதிய ரக விதையில்லா கருப்பு திராட்சை சாகுபடி செய்ய கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்ற விவசாயிகளுக்கு இந்த ரகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆனைமலையன் பட்டியில் உள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையம் சார்பில் திராட்சை விவசாயிகள் 25 பேர்களை புனேயில் உள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்துசென்றனர். புதிய தொழில்நுட்பங்கள், ரகங்கள், ஏற்றுமதி, பதப்படுத்துதல் போன்றவை களை தெரிந்து கொள்ள இந்த பயணம் உதவியுள்ளது. பயணத்தை முடித்து திரும்பிய விவசாயிகள் கூறியதாவது: தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் 2 நாட்களும், ஒரு நாள் முன்னோடி விவசாயிகள் தோட்டங்களிலும் பயிற்சி தரப்பட்டது. பல்வேறு புதிய விஷயங்கள் தெரிந்து கொண்டோம். திராட்சை சாகுபடியில் புதிய தொழில்நுட்பங் களை விளக்கினார்கள், என்றனர்.திராட்சை ஆராய்ச்சி நிலைய தலைவர் பார்த்திபன் கூறியதாவது: நாசிக் அருகில் நானா சாகிப் என்பவர் கண்டுபிடித்துள்ள "நானா சாகிப் பர்ப்பிள்' என்ற புதிய ஜம்போ சரத் விதையில்லா கருப்பு திராட்சை சாகுபடியை பார்த்தோம். அந்த ரகத்தை

கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்ய நமது விவசாயிகள் ஆர்வம் காட்டினர். இந்த ரகம் டிசம்பரில் வேறு எங்கும் திராட்சை கிடைக்காத காலத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. கிலோவிற்கு விலை ரூ. 150 முதல் 180 வரை கிடைக்கிறது. விவசாயிகள் இந்த ரகத்தை சாகுபடி செய்ய முடிவு செய்துள்ளனர். தற்போது நமது ஆராய்ச்சி நிலையத்தில் 20 ஆயிரம் குச்சிகள் விற்பனைக்கு தயாராக உள்ளது. விவசாயிகள் வாங்கிச்செல்கின்றனர், என்றார்.

## விவசாயிகள் குறை தீர் கூட்டம்

தேனி : தேனி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நாளை (மார்ச் 20) காலை 11 மணிக்கு கலெக்டர் வெங்கடாச்சலம் தலைமையில் நடக் கிறது. விவசாயிகள் தங்கள் குறைகளை மனுக்கள் மூலம் தெரிவிக்க லாம். கூட்டத்தில் அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர். கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறலாம் என வேளாண் இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

## ரூ.1.80 கோடிக்கு பஞ்சு வணிகம்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட் டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி சந்தை நடந்தது. இதில் 1,244 விவசாயிகள் 11,644 மூட்டை பஞ்சினை விற்பனைக்கு கொண்டு வந்தனர். சுவின் பஞ்சு ரகம் குவிண்டால் அதிகபட்சம் 4,509 ரூபாயும், குறைந்தது 4,109 ரூபாயும், எல்.ஆர்.ஏ., பஞ்சு ரகம் அதிகபட்சம் 4,141 ரூபாயும், குறைந்த பட்சம் 3,709 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ரூ.1.80 கோடிக்கு வணிகம் செய்யப்பட்டது.

## பொன்னங்குப்பத்தில் விவசாய பண்ணை பள்ளி

விக்கிரவாண்டி : விக்கிரவாண்டி அடுத்த பொன்னங்குப்பத்தில் பாசிபயிறு சாகுபடி குறித்த பண்ணை பள்ளி பயிற்சி நடந்தது. விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை அலுவலகம் சார்பில் வேளாண்மை விரிவாக்க திட்டத்தில் பொன்னங்குப்பம் கிராமத்தில்

விவசாயி ரவிச்சந்திரன் நிலத்தில் பாசிபயிறு சாகுபடி குறித்த பண்ணை பள்ளி பயிற்சி நடந்தது. மாநில திட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு ) இளவரசன் சாகுபடி குறித்தும் , உதவி இயக்குனர் செல்வபாண்டியன் தரமான விதைகள் தேர்வு குறித்த பயிற்சியளித்தனர். தொழில் நுட்ப மேலாளர் சாம்பசிவம் மற்றும் பொன்னங்குப்பம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் 25 பேர் கலந்து கொண்டனர்.

## நவீன தொழில் நுட்பம் குறித்த பயிற்சி

காரைக்குடி : கோவிலூர் மடாலய சனாதன தர்ம உலக பல்கலை அறநிலையம் சார்பில் திரைப்படத்துறையில் நவீன தொழில் நுட்பம் குறித்த பயிற்சி நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது. கல்லூரி முதல்வர் குமரப்பன் தலைமை வகித்தார். கோவிலூர் ஆதீனம் மெய்யப்ப சுவாமி துவக்கி வைத்தார்.ஒளிப்பதிவாளர்கள் கண்ணன், அழகிய மணவாளன் பயிற்சி அளித்தனர். படத்தொகுப்பு குறித்த பயிற்சியை எடிட்டர் லெனின், அருண் அளித்தனர். கவிஞர் இளம்பிறை, ஒளிப்பதிவாளர் யுவராஜ் பங்கேற்றனர். சான்றிதழ் வழங்கப்பட்டது.

# தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை 16,334 கோடியானது



புதுடெல்லி: நாடு முழுவதும் கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் தரவேண்டிய தொகை கடந்த பிப்ரவரியில் ரூ.16,334 கோடியாக அதிகரித்துள்ளது என நாடாளுமன்றத்தில் உணவுத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் கரும்பு

விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் தரவேண்டிய தொகை 522 கோடி என்றும் அவர் கூறினார்.

## விவசாயிகள் குறை தீர் கூட்டம்

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகளின் குறை தீர்க்கும் கூட்டம் நாளை (20ம்தேதி) காலை 11 மணிக்கு ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடக்கிறது. இதில் வேளாண்மை மற்றும் சார்பு துறை அதிகாரி கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வுகாண உள்ளனர். மாவட்டம் முழுவதுமுள்ள விவசாயிகள் தவறாது கலந்து கொண்டு குறைகளை நேரடியாகவோ அல்லது மனு மூலமாக அளிக்கலாம்.

## தொடர்ந்து உற்பத்தி குறைவு மரவள்ளி கிழங்கு விலை உயர்வு

பரமத்திவேலூர், : பரமத்தி வேலூர் தாலூக்கா கபிலர்மலை, பெரியசோளிபாளையம், தி.கவுண்டம்பாளையம், பெருங்குறிச்சி, சுள்ளிப்பாளையம், மருதூர், மோகனூர் சுற்றுவட்டாரப்பகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் விளை யும் மரவள்ளிக்கிழங்கு களை புதன் சந்தை, புதுச்சத்திரம், செல்லப்பம்பட்டி, மின்னாம்பள்ளி, கீரனூர், நாமகிரி பேட்டை, ஜேடர்பாளையம், ஆத்தூர் உள்ளி ட்ட பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வரும் சவ்வரிசி தயார் செய்தும் கிழங்கு மாவு மில்களுக்கு புரோக்கர்கள் மூலம் டன் கணக்கில் வாங்கி அனுப்பிவைக்கின்றனர். மரவள்ளி கிழங்குகளை (டார்ச்) பாய்ண்ட் அடிப்படையில் வாங்குகின்றனர். கிழங்குகளில் எத்தனை பாயண்ட் டார்ச் சத்து இருக்கின்றதோ அதற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. சவ்வரிசி விலையை சேகோசர்வ் மூலம் நிர் ணயம் செய்யப்படுகிறது. கடந்த வாரம் மரவள்ளிக்கிழங்கு ஒரு டன்

ரூ4,500க்கு விற்பனையானது. இந்த வாரம் முதல் இரகம் ஒரு டன் ரூ7,500க்கும், அதே போல் ஜிப்ஸ் தயாரிப்போர் ஒரு டன் கி8,000க்கும் வாங்கிச்செல்கின்றனர். மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி தொடர்ந்து குறைவின் காரணமாகவும், ஜவ்வரிசி தொடர்ந்து உயர்வு அடைந்துவரும் காரணமாகவும், மரவள்ளிக்கிழங்கின் விலை உயர்ந்து உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கூடுதல் இயக்குனர் ஆய்வு</u>

கோபி, : கோபி பகுதியில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமை தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை கூடுதல் இயக்குனர் ஆய்வு செய்தார். கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் பாதிப்பை தடுக்க ஆண்டுதோறும் இரண்டு முறை கோமாரி நோய் தடுப்பூசி கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் இலவசமாக போடப்படுகிறது. இந்த திட்டத்தின் படி தமிழகம் முழுவதும் கடந்த 1ம் தேதி முதல் வருகிற 21ம் தேதி வரை கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது. தமிழகம் முழுவதும் நடைபெற்று வரும் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. கோபி அருகில் உள்ள நாகதேவன்பாளையம், நாதிபாளையம், செட்டியாம்பாளையம், குள்ளம்பாளையம், கணபதிபாளையம், கவுண்டன்புதூர் ஆகிய பகுதியில் நடைபெற்று வரும் கோமாரிநோய் தடுப்பூசி முகாமை நேற்று தமிழ்நாடு கால்நடைபராமரிப்பு துறை கூடுதல் இயக்குனர் டாக்டர் கமலநாதன் ஆய்வு செய்தார். எத்தனை கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப் பட்டுள்ளது என்பது குறித்து ஆய்வு செய்த அவர் மீதமுள்ள கால்நடை களுக்கு விடுபடாமல் கோமாரிநோய் தடுப்பூசியை போடவேண்டும் என்று கால்நடை டாக்டர்களுக்கு அறிவுறுத்தினார். இதைத்தொடர்ந்து நிருபர்களிடம் டாக்டர் கமலநாதன் கூறியதாவது: தமிழகம் முழுவதும் மொத்தம் 93 லட்சத்து 54 ஆயிரத்து 545 கால்நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதில் இது வரை 66 லட்சத்து 36 ஆயிரத்து 430 கால்நடைகளுக்கு தடுப்பூசி

போடப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் இந்த முகாம் குறித்த விழிப்புணர்வை கால்நடை பாராமரிப்பு துறையினர் நன்றாக செய்துள்ளனர். இதனால் ஏராளமான விவசாயிகள் தங்களின் கால்நடைகளை முகாமுக்கு கொண்டு வந்து கோமாரிநோய் தடுப்பூசி போட்டு வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 3 லட்சத்து 69 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது வரை 2 லட்சத்து 92 ஆயிரம் கால்நடை களுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதமுள்ள கால்நடைகளுக்கு வருகிற 21ம் தேதிக்குள் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 21ம் தேதிக்குள் கோமாரிநோய் தடுப்பூசி போடப்படாத கால்கடைகளை கண்டறிந்து ஒரு வாரத்திற்குள் தடுப்பூசி போடப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். அப்போது, ஈரோடு மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் முருகன் மற்றும் கால்நடைத்துறை துணை இயக்குனர்கள் பழனிசாமி, உதவி இயக்குனர்கள் மணிசேகர், தங்கவேல், சரவணகுமார், நோய்புலனாய்வு உதவி இயக்குனர் கோவிந்தராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையம்</u>

கோவை, : கோவை வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சங்கரன் வெளியிட்ட அறிக்கை: அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் மையங்களை அமைக்க தமிழக அரசு அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் படி முதல் கட்டமாக 65 மையங்களை நடப்பாண்டில் அமைக்க ரூ.6.5 கோடி அரசு மானியமாக வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய கூலி, ஆள் பற்றாக்குறையை சமாளிக்க வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு எடுத்து பயன்படுத்துவதே சிறந்த தேர்வாகும் என கோவை மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார். கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர் ஒன்றியம் இத்திட்டத்திற்கென முதல்கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அனைத்து வட்டாரங்களுக்கும்

விரிவிப்படுத்தப் படவுள்ளது. உள்ளூர் விவசாய தேவைகளை கருத்தில் கொண்டு அமையப் பெறும் இந்த மையத்திற்கு தேவைப்படும் அனைத்து வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மொத்தம் ரூ.25 லட்சத்திற்கு அரசுடமையாக்கப்பட்ட வங்கியில் கடனுதவி பெற்று கருவிகள் வாங்கப்பட வேண்டும். அதிகபட்சம் 40 சதவீதம் வரை அதாவது, ரூ.10 லட்சம் வரை அரசு மானியமாக நான்கு ஆண்டுகளுக்கு பிறகு வழங்கப்படும். இந்த மையங்களை தொழில்முனைவோராக, தனி நபராகவோ, பங்குதாரர்களாகவோ அல்லது பதிவு பெற்ற விவசாயிகள் குழுக்கள், சங்கங்கள் ஏற்று நடத்தலாம். சங்கத்திற்கு தேவையான வேளாண் இயந்திரங்கள், கருவிகளை சங்க உறுப்பினர்களே உள்ளூர் விவசாயத் தேவைகளுக்கு ஏற்ப தேர்வு செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் வருவாயினை கடனுதவி பெற்ற அரசுடைமை வங்கியில் 5 ஆண்டுகளுக்கு திருப்பி செலுத்த வேண்டும். இந்த திட்டத்தினை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தினை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>நவீன தொழில்நுட்பத்தில் காய்கறி சாகுபடி பயிற்சி</u>

ஊட்டி, : நவீன தொழில்நுட்பத்தில் காய்கறி சாகுபடி, தேயிலையில் தரமான இலை பறித்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலை இணை இயக்குநர் மணி கூறியிருப்பதாவது: தோட்டக்கலைத்துறை சார்பில் நீலகிரி மாவட்ட விவசாயிகள் தங்களின் விவசாய உத்திகளை மேம்படுத்தி கொள்ளும் வகையில் அவர்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகள், செயல்முறை விளக்கம் உள்ளிட்டவை அளிக்கப்பட உள்ளது. இதன்படி இன்று (18ம் தேதி) மற்றும் நாளை குன்னூர் அருகேயுள்ள உல்லாடா பகுதியிலும், 24, 25 ஆகிய தேதிகளில் ஊட்டி அருகேயுள்ள மேல்தொரையட்டியிலும், 26, 27 ஆகிய தேதிகளில்

கூடலூர் புத்தூர்வயல் ஆகிய பகுதிகளிலும் பயிற்சி முகாம்கள் நடக்கின்றன. இப்பயிற்சி முகாம்களில் மண் மாதிரி எடுத்தல், நவீன தொழில் நுட்பத்துடன் காய்கறி சாகுபடி, தேயிலையில் தரமான இலை எடுத்தல் மற்றும் உரமிடுதல் மற்றும் பூச்சி நோய் கட்டுபாடு, இயற்கை வேளாண்மை பற்றிய தொழில்நுட்பங்கள், குறித்து தொழில்நுட்ப அலுவலர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுமட்டுமின்றி செயல்முறை விளக்கங்களும் அளிக்கப்பட உள்ளன. எனவே இப்பயிற்சிகளில் விவசாயிகள் அதிகளவில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும். இவ்வாறு மணி தெரிவித்துள்ளார்.

## <u>கரூர் மாவட்டத்தில் உணவு, தானிய உற்பத்தி குறிப்பிட்ட இலக்கை அடைந்துள்ளன வரும் ஆண்டில் மழை பெய்யுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு</u>

கரூர், கரூர் மாவட்டத்தில் உணவுதானிய உற்பத்தி பெருக்க திட்டங்கள் குறிப்பிட்ட இலக்கினை அடைந்துள் ளன. வரும் ஆண்டில் மழை எப்படி இருக்கும் என்கிற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இரண்டாம் பசுமைப்புரட்சியை உருவாக்கும் விதத்தில் தமிழக அரசால் வேளாண்துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. உணவு தானிய உற்பத்திக்கு சிறப்புக் கவனம் எடுத்து புதுவகை யான பயிர் வகைகளை அறிமுகம் செய்து செயல்படுத்தப் படுகிறது. அதன்அடிப்படையில் கரூர் மாவட்டத்தில் நடப்பு 2014-15ம் ஆண்டு 1 லட்சத்து 6 ஆயிரத்து 300 டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதனை அடைய திட்டப்பணிகள் செயல் படுத்தப்பட்டது. கரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 488.53 மிமீ அளவு மட்டுமே மழை பெய்தது. நடப்பாண்டை பொறுத்தளவில் இதுவரை 568.92 மிமீ மழை பெய்துள்ளதால் இதுவரை 13 சத வீதம் மழை அளவு அதிகம் கிடைத்துள்ளது. இது விவசாயிகள் திட்டமிட்ட பயிர் களை பயிரிட ஏதுவாக இருந்தது. முக்கிய பயிரான

நெல் 15ஆயிரத்து 400 எக்டேரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இலக்க எய்தப்பட்டுள்ளதாக வேளாண் துறையினர் தெரிவித்தனர். நெல்சாகுபடியில் நவீன முறையான திருந்திய நெல்சாகுபடி முறை மூல மாக கடந்த ஆண்டு 8300 எக்டேரில் சாகுபடியானது. இந்த ஆண்டு போதிய மழைகாரணமாக 9 ஆயிரத்து 82 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் திருந்திய நெல்சாகுபடி செயல் விளக்க திடல்கள் 600 அமைக்கப்பட்டு தலா ரூ.1500 மானியம் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. சிறுதானியங்களை அதிக அளவில உற்பத்தி செய்யும் வகையில் வேளாண்துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் உள் ளன. சிறுதானியத்தில் ஒன் றான வரகு விதை வரும் ஆண்டுகளில் 10ஆயிரம் எக்டேரில் விதை நடவு செய்ய திட்டமிடப்பட்டுள் ளது. ஏக்கருக்கு ரூ.5ஆயிரம் செலவு வருமானம் ரூ.30 ஆயிரம் பெறலாம். சோளப்பயிர் 14ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்ய திட்டமிட்டு இலக்கை மிஞ்சி இதுவரை 25ஆயிரத்து198 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எக்டே ருக்கு 4ஆயிரம் கிலோ விளைச்சல்தரும் சோளம் சிஎஸ்எச்14 ரகம் ஒரு டன் விவசாயிகளுக்கு செயல்விளக்க திடல் அமைக்க வழங்கப்பட்டிருக்கிறது. பயறு வகை உற்பத்தியை பெருக்க 13ஆயிரத்து 30 எக்டேர் இலக்கில் 12 ஆயிரத்து425 எக்டேர் இது வரை எய்தப்பட்டது. துவரை சாகுபடியில் புதிய தொழில்நுட்பம் அறிமுகம் செய்து உயர் ரகங்களான கோஆர் ஜி7, எல்ஆர்ஜி 41, ரக விதைகளை கொண்டு நடவு துவரை செயல்விளக்க திடல்கள் 50சதவீத மானியத்தில் ரூ.7500வீதம் ஆயிரத்து100 திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது. நெல்லில் 260 டன், பயறுவகைகளில் 87டன், எண்ணைவித்தில் 260 டன், சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்ய இலக்கு பெறப்பட்டு சான்று விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பருவ மழை பெய்ததன்காரண மாக இந்த அளவுக்கு உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டைப்பொறுத்தளவில் ஆரம்பமே

உக்கிர மாக இருக்கிறது. கோடை வெயில் முன்ன தாக துவங்கி கொளுத்தி வரு கிறது. இன்னும் ஏப்ரல், மே மாதங்களில் வெயிலின் தாக்கம் இன்னும் அதிகமாக இருக்கும். தற்போது மழை ஆங்காங்கே பெய்துவரும் நிலையில் கரூர் மாவட்டத்தில் லேசான தூறல்மட் டுமே உள்ளது. இருந் தாலும் இந்த ஆண்டு மழை கடந்த ஆண்டைப்போல இருக்க வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப் பாக உள்ளது.

## விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம்

கரூர், : கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 20ம்தேதி காலை 11மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. கரூர் மாவட்ட விவசாயிகள், விவசாயசங்க உறுப்பினர்கள் அனைவரும், கூட்டத்தில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விவசாயம், மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூலிகைப்பயிர் சாகுபடி விழிப்புணர்வு ஏற்படுத்த வலியுறுத்தல்

கரூர்,: மூலிகைப்பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். கரூர் மாவட்டத்தில் மத்திய அரசின் நிதியோடு தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்கீழ் மூலிகைப்பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு சாகுபடி செலவுகளை ஈடுகட்டும் வகையில் 50சதவீத மானியம் வழங்கப்பட்டு சாகுபடி பரப்பினை அதிகப்படுத்த வேளாண் துறை நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தாலுகாவில் அதிக அளவில் மூலிகைப்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி பரப்பினை மேலும் அதிகப்படுத்த மூலிகைப் பயிரிட ஏற்ற பகுதிகள் எவை என கண்டறிய வேண்டும். இதற்கேற்ற மண்வளம் உள்ள பகுதிகளை கண்டறிந்து விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

இதுகுறித்து விளக்கம் அளிக்கும் வகையில் தேசிய மூலிகைப்பயிர்கள் இயக்க திட்ட விளக்கக் கூட்டங்களை நடத்தி விவசாயிகளிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்தவேண்டும். கரூர் மாவட்டத்தில் மூலிகைப்பயிர்கள் குறைந்த பரப்பரளவில் செயல்படுத்தப்பட்டாலும், குளோரியயோசா எனப்படும் கண்வலிக்கிழங்கு பெருமளவு விவசாயிகளால் அதிக அளவில் பயிரிட வாய்ப்புகள் உள்ளன. தேசிய மூலிகைப்பயிர்கள் இயக்கத் திட்டத்தின் கீழ் மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு சாகுபடி செலவை ஈடுகட்டும் வகையில் 50சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இது குறித்து வேளாண் துறை அதிகாரிகள் போதிய விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என விவசாயி பழனிச்சாமி கூறினார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

புதுக்கோட்டை, : விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 20ம் தேதி காலை 10 மணியளவில் புதுகை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் கணேஷ் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இத்தகவலை புதுகை கலெக்டர் கணேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## அதிக பரப்பளவில் எண்ணெய்வித்து பயிர் சாகுபடி செய்யுங்கள் விவசாயிகளுக்கு அதிகாரி வேண்டுகோள்

அன்னவாசல், : அன்னவாசல் அருகேயுள்ள குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில் எண்ணெய்வித்துப் பயிர்கள் மற்றும் எண்ணெய் பனை தேசிய இயக்கத்தின் சார்பாக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.இப்பயிற்சியை வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் தலைமை வகித்து துவக்கி வைத்து பேசுகையில் விவசாயிகள்

எண்ணெய்வித்துப் பயிர்களை அதிகளவு சாகுபடி செய்து எண்ணெய்வித்து உற்பத்தியினை உயர்த்திட உறுதுணையாக இருக்கவேண்டும். அரசின் வேளாண் திட்டங்களை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். முன்னிலை வகித்துப் பேசிய உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி பயிற்சியில் கற்றுக்கொண்ட தொழில்நுட்பங்களை பிற விவசாயிகளுக்கும் தெரிவிக்க கேட்டுக்கொண்டார். மேலும், வேளாண் தொடர்பான ஆலோசனை களுக்கு உழவர் பயிற்சி நிலையத்தினைத் தொடர்பு கொள்ளலாமெனத் தெரிவித்தார். எண்ணெய்வித்துப் பயிற்சியில் நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஊட்டச்சத்துக் கரைசல் தெளி க்கும் வழிமுறைகளையும் விதைநேர்த்தி, பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு ஆகியவை குறித்தும் உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன் பயிற்சி வழங்கினார். குடுமியான்மலை மத்தியக் கட்டுப்பாட்டு ஆய்வக மூத்த வேளாண் அலுவலர் இப்ராம்ஷா பயிற்சியில் கலந்துகொண்டு மண்ணில் அங்கக உரங்களில் முக்கியத்துவம், பயிர்களில் நுண்ணூட்டங்களின் பங்கு, உயிர் உரங்கள் இடுவதன் அவசியம் குறித்தும் விளக்கினார். குடுமியான்மலை வேளாண் கல்லூரி உழவியல் உதவிப் பேராசிரியர் சங்கீதா, நிலக்கடலைச் சாகுபடித் தொழில்நுட்பங்களை விளக்கினார். பூச்சியியல் உதவிப் பேராசிரியர் அருள்பிரகாசம் நிலக்கடலையைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் மேலாண்மை குறித்து விளக்கமளித்தார். இப்பயிற்சியில் விவசாயிகளுக்குப் பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, விதைநேர்த்தி, ஊட்டச்சத்துக் கரைசல் தெளித்தல் குறித்த தொழில்நுட்பச் செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. மேலும் அண்ணா பண்ணையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை வயல்களை நேரில் காண்பித்துத் தொழில்நுட்பங்கள் விளக்கிக் கூறப்பட்டது. எண்ணெய்வித்துத் தொழில்நுட்பக் கையேடு மற்றும் பயிற்சி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. வேளாண் அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

**<u>நீடாமங்கலம் கோட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கரில் கோடை நெல் சாகுபடி</u>**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண் கோட்ட பகுதியில் மின் மோட்டார் மூலம் மூன் றாவது போக கோடை சாகுபடி பணிகள் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் நடந்து வருகிறது. முன்கூட்டியே நடவு நடந்த இடங்களில் களை எடுப்பு பணி தற்போது நடந்து வருகிறது. அதேபோல் நகர், பூவனூர், சித்தமல்லி, பரப்பனாமேடு, பெரம்பூர், ராயபுரம் உள்ளிட்ட கிராமங்களில் ஒருபுறம் பெண்கள் மூலம் கை நடவு பணி, மற்றொரு புறம் இயந்திரம் மூலம் நடவு பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஆடுதுறை 43,45, கோ 51, ஏ.எஸ்.டி 16 ஆகிய ரக நெல் நாற்றங்காலில் விதை தெளிக்கப்பட்டு நடவு நடந்து வருகிறது. இம்மாத இறுதியில் நடவு முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆதனூர் கிராமத்தில் நடந்த இயந்திர நடவு பணியை நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் பார்வையிட்டார். பின்னர் அவர் கூறுகையில், மின் மோட்டார் மூலம் 20ஆயிரம் ஏக்கர் நிலத்தில் கோடை சாகுபடி பணிகள் தொடங்கி நடைபெற்றறு வருகிறது. சம்பா மற்றும் தாளடியில் அதிக மகசூல் பெற்றது போல், கோடை சாகுபடியிலும் அதிக மகசூல்பெற விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுவருகிறதுஎன்றார்.

**<u>திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் 16 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி</u>**

திருத்துறைப்பூண்டி, : திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் 16 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை மன்னார்குடி கோட்டம் சார்பில் திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் உள்ள 32 ஊராட்சிகளில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. குன்னூர் தோளாச்சேரியில் நடந்த

முகாமை ஒன்றியகுழு தலைவர் வேதநாயகி சிங்காரவேலு துவக்கி வைத்தார். உதவி இயக்குநர் டாக்டர் லூர்துசாமி, ஊராட்சி மன்ற தலைவர் விஜிலா முருகேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கொருக்கை ஊராட்சியில் முகாம் நிறைவுற்றது. முகாம் ஒவ்வொரு கிராமங்களிலும் காலை 6 மணி முதல் 9 மணி வரை, மாலை 3 மணி முதல் 6 மணி வரை நடைபெற்றது. கால்நடை மருத்துவர் ராமலிங்கம் தலைமையில் டாக்டர்கள் சுரேந்தர், காவ்யா மற்றும் கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் முகாமில் கலந்து கொண்டனர். 16 ஆயிரம் கால்நடைகளுக்கு 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை டாக்டர் ராமலிங்கம் உள்ளிட்ட மருத்துவ குழுவினர் செய்திருந்தனர்.

**<u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>**

வேதாரண்யம், : வேதாரண்யம் தாலுகா தலைஞாயிறு ஒன்றியம் நாலுவேதபதி ஊராட்சியில் தமிழக அரசு கால்நடை பாரமரிப்புதுறை சார்பில் கோமாரி தடுப்பூசி முகாம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் கனகராஜ் தலைமை வகித்தார். துணைத்தலைவர் நடராசன், ஊராட்சி உறுப்பினர்கள் மலர்விழி, பழனித்துரை, கோவிந்தராஜன், முருகேசன், ராணி, ஆறுமுகம், சந்திரா, தங்கம், கால்நடை உதவி மருத்துவர் நெல்சன் ஜெயக்குமார், ஆய்வாளர் கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முகாமில் நாலுவேதபதி ஊராட்சியை சேர்ந்த 600 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. ஊராட்சி எழுத்தர் ரெங்கராஜ் நன்றி கூறினார்.

**<u>அணை கட்ட பதநீர் கலவை</u>**

கன்னியாகுமரி, : மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகும் கோதையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது பேச்சிப்பாறை அணை. இதனை வடிவமைத்து கட்டியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த

அலெக்சாண்டர் மிஞ்சின். 1897ல் துவங்கிய கட்டுமானப்பணி 1906ல் நிறைவடைந்தது. இந்த அணையின் நீளம் 1396அடி, நீர்ப்பிடிப்பு பரப்பு 15 சதுர கிலோ மீட்டர். கொள்ளளவு 5306 மில்லியன் கன அடி. நூற்றாண்டுகளைக் கடந்து இந்த அணை கம்பீரமாக நிற்கிறது. பேச்சிப்பாறை அணை கட்டுவதற்கு தேவையான சுண்ணாம்பு, களிமண், பதநீர் கலந்த கலவை குலசேகரத்தில் தயார் செய்யப்பட்டு மாட்டு வண்டி மற்றும் குதிரை வண்டிகள் மூலம் பேச்சிப்பாறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதனால் இந்த பகுதிக்கு சுண்ணாம்பு களம் என பெயர் வந்துள்ளது. பாண்டிய மன்னன் ஆட்சி காலத்தில் அஞ்சுகண்டறை பகுதியில் கோதையாற்றின் குறுக்கே கல்லால் ஆன அணை கட்டப்பட்டுள்ளது. தற்போது அது உடைந்து சிதறி காணப்படுகிறது. இதுபோன்று பெருஞ்சாணியில் பரளியாற்றின் குறுக்கே அணை கட்டப் பட்டு அதிலிருந்து செல்லும் கால்வாய் பாண்டியன் கால்வாய் என்று அழைக்கப்படுகிறது. தற்போது அந்த பகுதியில் புதிய அணை கட்டப்பட்டு புத்தன் அணை என அழைக்கப்படுகிறது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சிட்டுக்குருவிகளை காப்பாற்றுவோம்</u>**




ஒருகாலத்தில் செல்வசெழிப்புக்கு எடுத்துக்காட்டாக சிட்டுக் குருவிகளைத்தான் சொல்வார்கள். எங்கு சிட்டுக்குருவிகள் அதிகமாக

இருக்கிறதோ, அங்கு விவசாயம் செழித்தோங்குகிறது என்பார்கள். பொதுவாக காகமும், சிட்டுக்குருவியும் மனிதர்கள் வாழும் பகுதிகளில் தான் அதிகம் இருக்கும். மக்களை சார்ந்தே இதன் வாழ்க்கையும் இருக்கும். சிட்டுக்குருவிகள் அடர்ந்த காடுகளிலோ, மலைகளிலோ, மனித நடமாட்டம் இல்லாத இடங்களிலோ பெரும்பாலும் காணப் படுவதில்லை. வீடுகள் அதிகமாக இருக்கும் இடங்களில் அதிலும் குறிப்பாக, உணவு தானியங்கள் சிதறிக்கிடக்கும் இடங்களில்தான் அதிகமாக வசிக்கும். மனிதர்களோடு பழகாவிட்டாலும், மனித நடமாட்டம் இருக்கும் இடத்தில்தான் அதிகமாக காணப்படும். இந்த செல்லக்குருவிகள் பயிர்களில் உள்ள கதிர்களை கொத்துவது கிடையாது. வீணாக கிடக்கும் உணவு தானியங்கள், சின்னஞ்சிறு பூச்சிகளைத்தான் கொத்தி தின்னும். மென்மையான இதயம் கொண்ட சிட்டுக்குருவிகள், வீடுகளில் ‘கீச் கீச்’ என்று கத்திக்கொண்டு, தத்தி தத்தி நடந்துவந்து கீழே கிடக்கும் உணவு தானியங்கள், சிதறிக்கிடக்கும் உணவுப்பொருட்களை கொத்தி கொத்தி உண்ணும் அழகை காண கண்கோடி வேண்டும் என்பார்கள். அவ்வப்போது வீடுகளில் சிந்திக்கிடக்கும் தண்ணீரையும், பாத்திரங்களில் உள்ள தண்ணீரையும் போய் குடித்துக்கொண்டே இருக்கும். தண்ணீர் இல்லையென்றால், சிட்டுக்குருவி இல்லை. மைனா, லவ் பேர்ட்ஸ், கிளி, கோழி போல வீடுகளில் கூண்டுகளில் அடைத்து வளர்க்க முடியாது என்றாலும், தானாகவே வீடுகளில் உயரமான இடங்களில் வைக்கோல், சிறு சிறு குச்சிகள், கந்தல் துணிகளை வைத்து கூடு கட்டி குடியிருக்கும். கடந்த சில ஆண்டுகளாக சிட்டுக்குருவி இனம் அழிந்துகொண்டே இருக்கிறது. இதற்கு காரணம், நவீன வீடுகளில் சிட்டுக்குருவிகள் கூடுகட்ட எந்தவித வசதியும் இல்லை. அவைகளுக்கான உணவுப்பொருட்கள் வீடுகளில் சிந்திக் கிடப்பதுமில்லை, யாரும் போடுவதும் இல்லை. தண்ணீரும் கிடைப்பதில்லை. மேலும், இந்த சிட்டுக்குருவிகள் மின்சார விசிறியில் சிக்கியும் உயிரிழந்துவிடுகிறது.

செல்போன் டவரில் இருந்து வெளியாகும் காந்த கதிர்களை சிட்டுக் குருவிகளின் மென்மையான இதயம் தாங்கமுடியாமல் நின்றுவிடுகிறது. எல்லாவற்றையும் விட பெரிய கொடுமை என்னவென்றால், செக்ஸ் பலத்துக்கு 'சிட்டுக்குருவி லேகியம்' என்று இந்த சிறு பறவைகளை கொன்று தயாரிக்கிறார்கள். அழிந்துவரும் இந்த சிட்டுக்குருவி இனத்தை காப்பாற்ற 'உலக சிட்டுக்குருவி தினம்' நாளை 20–ந் தேதி கடைப்பிடிக்கப் படுகிறது. இந்த இனத்தை காப்பாற்றுவது மக்களிடம் தான் இருக்கிறது. ஓரிரண்டு சிட்டுக்குருவிகள் தென்படும்போது சிறிது தானியத்தை 2 நாட்கள் தொடர்ந்து போட்டால் வரத் தொடங்கிவிடும். பல இடங்களில் அழிந்துவரும் சிட்டுக்குருவி இனத்தை காப்பாற்ற பறவை ஆர்வலர்கள் சிறிய மண்பானை குடுவைகளை வீடுகளில் வைப்பதை எல்லோரும் பின்பற்றலாம். கோடைகாலத்தில் இதுபோன்ற பறவைகளுக்காக வீடுகளில் உயரமான இடத்தில் ஒரு கிண்ணத்தில் தண்ணீர் வைத்தால் சிட்டுக் குருவிகளுக்கு புத்துயிர் கொடுக்கமுடியும். கோடையில் மக்களுக்காக தண்ணீர் பந்தல்களை வைக்க அரசியல் கட்சிகளும், தொண்டு நிறுவனங்களும் முற்படும் போது, வாயில்லா இந்த ஜீவன்களுக்கும் தண்ணீர் வழங்கினால், இந்த உயிர்களையும் காப்பாற்றலாமே! சென்னையில் இந்திய கால்நடைகளை நேசிக்கும் இயக்கம், இதற்காக பொதுமக்களுக்கு ஆங்காங்கு வைக்க குவளைகள் வழங்கியது. இதுபோல, சென்னை மாநகராட்சி ஆணையராக ராஜேஷ் லக்கானி இருந்தபோது, மாநகராட்சி பூங்காக்களில் சிட்டுக்குருவி போன்ற பறவைகளுக்காக மரங்களில் அவைகளுடைய கூடுகள்போல வைத்து, உணவு தானியங்கள் போடுவதற்கும், தண்ணீர் வைப்பதற்கும் வசதி செய்ய முயற்சி எடுத்தார். அவர் மாற்றப்பட்டபோது, அந்த முயற்சியும் நின்றுபோனது. அவரை பின்பற்றி, சென்னை உள்பட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் ஆணையர்கள், செயல் அதிகாரிகள் பூங்காக்களில் இந்த வசதிகளை செய்துகொடுத்தால்,

பொதுமக்களும் ஆர்வத்தோடு பங்கேற்பார்கள். ‘சிட்டுக்குருவிகளை காப்பாற்றுவோம்’, செல்ல பறவைகளுக்கு வாழ்வு கொடுப்போம்.

## தாண்டிக்குடியை சேர்ந்த சிறந்த விவசாயிக்கு விருது



பெரும்பாறை, மதுரையில் நடந்த விழாவில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகா தாண்டிக்குடியில் காய்கறி பயிர் உற்பத்தியில் சிறப்பான சேவைக்காகவும், ஆராய்ச்சி உறுதுணைக்காகவும், சிறந்த காய்கறிப்பயிர் உற்பத்திக்காகவும், மலர் வேளாண்மை விவசாய ஆண்டு விழாவில் நடத்திய பயிர்விளைச்சல் (காப்பி பயிர் சாகுபடி) போட்டியில் அதிக உற்பத்தி செய்த பி.ஆர்.எம். ரவிச்சந்திரனுக்கு மண்டல வேளாண்மை விருதும், சிறந்த விவசாயிக்கான விருதும் வழங்கப்பட்டது. அந்த விழாவில் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தர்கள் பாஸ்கரன், மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## காஞ்சீபுரத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடக்கிறது

காஞ்சீபுரம், காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

காஞ்சீபுரம் மாவட்டத்தை சேர்ந்த வேளாண்மை பெருமக்களுக்கு காஞ்சீபுரம் மாவட்டத்தின் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நாளை (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு முக்கிய வேளாண்மைத்துறை மற்றும் சார்பு துறைகள்

தொடர்பான கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 390 குவிண்டால் பருத்தி ரூ.14¾ லட்சத்திற்கு விற்பனை</u>**



எளம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 390 குவிண்டால் பருத்தி ரூ.14¾லட்சத்திற்குவிற்பனைநடைபெற்றது.

பருத்திவிற்பனை

பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஏலமுறையில் பருத்தி விற்பனை நடைபெற்றது. இந்த மறைமுக ஏல விற்பனைக்காக 83 விவசாயிகள் தாங்கள் விளைவித்த 390 குவிண்டால் எடை கொண்ட 1,100 மூட்டை பருத்தியை கொண்டு வந்தனர். கும்பகோணம், திருச்சி, பெட்டவாய்த்தலை, பெரம்பலூர், திண்டுக்கல் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த வியாபாரிகள் மற்றும் இந்திய பருத்திக் கழக அலுவலர்கள் ஒவ்வொரு விவசாயிகளின் மூட்டையாக பருத்தியின் தரத்தை சோதித்து அதற்கான தங்களது விலையை அலுவலர்களிடம் அளித்தனர். அதிக விலை நிர்ணயித்து கேட்ட வியாபாரிக்கு, விவசாயியின் அனுமதியுடன் பருத்தி விற்பனைசெய்யப்பட்டது.

ரூ.14லட்சத்து80ஆயிரம்

மிக நீண்ட இழை பருத்தியானது குவிண்டால் ஒன்று ரூ.3,629 முதல் 4,121 வரை விற்பனையானது. மொத்தம் 390 குவிண்டால் பருத்தியானது ரூ.14 லட்சத்து 80 ஆயிரத்துக்கு விற்பனையானது. எனவே பருத்தி விவசாயிகள் நன்கு வெடித்த பருத்தியினை அறுவடை செய்து நிழலில் உலரவைத்து 8 சதவீத ஈரப்பதத்துடன் தூசியில்லாமல் சுத்தப்படுத்தி

கொண்டு வரும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். அனைத்து பருத்தி விவசாயிகளும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு தாங்கள் சாகுபடி செய்யும் பருத்தியை கொண்டுவந்து சரியான எடையில் சரியான விலைக்கு விற்பனை செய்து பயன்பெற வேண்டும் என பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## திருச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் சேர்ந்து பயன் அடைவது எப்படி? கலெக்டர் பழனிச்சாமி அறிக்கை



திருச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் சேர்ந்து பயன் அடைவது எப்படி என்பது பற்றி கலெக்டர் விளக்கி உள்ளார். இது தொடர்பாக திருச்சி மாவட்ட கலெக்டர் கேஎஸ் பழனிச்சாமி வெளியிட்டு உள்ள ஒரு அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

வழங்கப்படும் உதவிகள்

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பதிவு பெற்ற மூல உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம், விபத்து மரணம் மற்றும் காயம், இயற்கை மரணம், ஈமச்சடங்கு செலவு உள்ளிட்ட நிதயுதவித் திட்டங்களும், காசநோய், புற்றுநோய் உள்ளிட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமும் மற்றும் உறுப்பினர் சார்ந்தவர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, ஈமச்சடங்கு செலவு உள்ளிட்ட நிதியுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பதிவு பெற்ற உறுப்பினருக்கான மகப்பேறு உதவித் தொகையானது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் வழங்கப்படுகிறது.

விண்ணப்பம் செய்வது எப்படி?

இத்திட்டத்தில் கல்வி உதவித்தொகை பெற கல்வி ஆண்டு துவக்கத்திலிருந்து 6 மாதத்திற்குள்ளும், திருமண உதவித்தொகை பெற திருமண தேதிக்கு முந்தைய 3 மாதத்திற்குள் அல்லது திருமண தேதி யிலிருந்து 6 மாதத்திற்குள்ளும், விபத்து மரணம் மற்றும் காயம் விபத்து நிகழ்ந்த 6 மாத காலத்திற்குள்ளும், இயற்கை மரணம் உதவித் தொகை பெறுவதற்கு இறப்பு நிகழ்ந்த 6 மாத காலத்திற்குள்ளும் விண்ணப்பிக்கலாம். மேலும், காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி எய்ட்ஸ் உள்ளிட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் பெற கால வரம்பு ஏதுமில்லை. எனவே விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், விண்ணப்ப மனுவினை அந்தந்த கிராம நிர்வாக அலுவலரிடமோ அல்லது தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்புதிட்டம்) அவர்களிடமோ அளித்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.